



# நகர் ஊரமைப்பு இயக்ககம்

## காஞ்சிபுரம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

## சிறுபினாயூர் ஊராட்சி

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், சிறுபினாயூர் கிராமம், நி.அ.எண்கள்:173/12,174/1A,174/3A, 174/4,177/3,177/4B,177/5A,177/6A,177/7, 182/2, 182/8A, 285/1, 285/3, 285/5 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு சாலைகள் அமைப்பு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்ப **எண்:** Y0238UQB / 2025 / TCP5
**அளவுத்திட்டம்: 1 : 1000**

**குறிப்பு:**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் பரப்பளவு | : | 30134.00 ச.மீ (7.45 ஏக்கர்) |
| சாலையின் பரப்பளவு | : | 9196.00 ச.மீ |
| மீதமுள்ள பரப்பளவு | : | 20938.00 ச.மீ |

மனைப்பிரிவின் எல்லை :
நிலையிலுள்ள சாலை :

**A. பொது ஒதுக்கீடுகள்:-** (உத்தேச சாலைப்பரப்பளவு நீங்கலாக மீதமுள்ள மனைப்பிரிவு பரப்பளவிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது)
உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டவை

| | | | |
|---|---|---|---|
| பூங்கா - 1 | : | 1371.00 ச.மீ | |
| பூங்கா - 2 | : | 742.00 ச.மீ | |
| மொத்தம் | : | 2113.00 ச.மீ | 10.09 % |

உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகளின்
பரப்பளவு : 9196.00 ச.மீ

**B. பொது உபயோகம்:-**
(TNCD&BR 2019, 47 (8)-ன் படி தானமாக ஒப்படைக்கப்பட வேண்டிய 1% ஒதுக்கீடு)
1. உள்ளாட்சிக்கான ஒதுக்கீட்டின்
பரப்பளவு : 186.00 ச.மீ 0.89 %

2. தமிழ்நாடு மின் உற்பத்தி (ம) பகிர்மான கழகத்திற்க்கான
ஒதுக்கீடு (TANGEDCO) பரப்பளவு : 112.20 ச.மீ 0.54 %

மூலைமுடக்கு
7.20 மீ - 12.00 மீ அகல சாலை : 1.50 மீ x 1.50 மீ

**நிபந்தனைகள்:**

1. இம்மனைப்பிரிவுக்கு சம்மந்தப்பட்ட உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடம் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதபட்டியல் மாவட்ட வருவாய்த்துறை அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2. அரசாணை எண்.18 நாள்:04.02.2019 மற்றும் அரசாணை எண்.16 31.01.2020 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை - ன்படி சாலை ஒதுக்கீடுகளை (ம) பொது உபயோக பகுதியினை உள்ளாட்சியே தானமாக பெற்றுக்கொண்டு பராமரிக்க வேண்டும் என்றும், நில உரிமம் குறித்து உள்ளாட்சியே முழுப்பொறுப்பு என்றும் தெரிவிக்கப்படுகிறது.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் அரசாணை எண்:181 வீ.வ (ம) ந.வ.-ன் நாள்: 09.12.2020 Para 4(IV) -ல் தெரிவித்த கீழ்கண்ட நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.
உள்ளாட்சி அமைப்பு, மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல்/ உரிமம் வழங்குவதற்கு முன் மனுதாரர் சாலை அமைப்பு வரைபடத்தின்படி தார்சாலைகள் அமைத்துள்ளதை உறுதிசெய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.மேலும் OHT அமைத்து நீர் வழங்குதல் வசதிகள்இ கழிவுநீர் வடிகால் (ம) தெருவிளக்குகள் போன்ற வசதிகள் உள்ளாட்சி அமைப்புகளால் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி அமைக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதி செய்து இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட விபரத்தினை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரீசீலணைக்கு சமா்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநா் அவா்களால் ரத்து செய்யப்படும்.
5. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் வழங்கப்பட வேண்டும்.
6. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்காக சம்மந்தப்பட்ட இடத்தில் 6'0" x 4'0" என்ற அளவுக்கு குறையாமல் காங்கீரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.
7. சாலை அமைப்பு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்வாரியத்திற்காக (TANGEDCO) ஒதுக்கப்பட்டுள்ள இடத்தினை மின்வாரிய (TANGEDCO) பயன்பாட்டிற்காக இடத்தின் அளவுகள், பரப்பளவு ஆகிய விவரங்களுடன் குறிப்பிட்டு தானமாக தானப்பத்திரம் மூலம் மின்வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.
8. மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலை நிறுத்தப்பட வேண்டும்.
9. மனையிடத்தின் ஊடே அமையும் உயர்மின்னழுத்த (HT Line) கம்பிபாதையின் அபிவிருத்திகள் ஏதும் செய்யக்கூடாது.
10. குறைந்த வருவாய் பிரிவினருக்கான மனைகளை[(EWS)124to156 - மனைஉட்பிரிவு நிலப்பயன்மாற்றம், மனைஒருங்கிணைப்பு செய்யக்கூடாது.
11. செயற்பொறியாளர், நீ.வ.து, கீழ்பாலாறு வடிநில கோட்டம்,காஞ்சிபுரம் கடித எண்.இவஅ2/கோ.9(சிறுபாலம்-சிறுபினாயூர்)/2026/நாள்.30.01.2026-ல்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள்யாவும் பின்பற்றப்பட வேண்டும்.
12. மனைப்பிரிவின் ஊடே அமையும் நீர்நிலைகளை தடை செய்யாமல் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

## சிறப்பு நிபந்தனைகள்:-

நகர் ஊரமைப்புத்துறை சட்ட பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை தொழில் நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

APPROVAL No:SWP/DTCP/KANCHIPURAM /LAYOUT NO:84/2026

துணை இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
காஞ்சிபுரம் மாவட்டம்.

Signature Not Verified
Signed by: Deputy Director
Location:Kancheepuram
Date:2026.04.07 12:49:11

Signature Not Verified
Signed by: Village Panchayat President
Location:Kancheepuram
Date:2026.04.13 17:00:31